# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## கொழும்பில் RIMES அமைச்சர்கள் மட்ட 4ஆவது மாநாட்டில் பங்கேற்ற இந்தியா

இலங்கையின் கொழும்பில் 2025 மே 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெற்ற அபாயங்கள் குறித்த முன்னெச்சரிக்கைகளுக்கான பிராந்திய ஒருங்கிணைப்பு அமைப்பின் (RIMES) 4ஆவது அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் இணைத் தலைமைத்துவத்துடன் இந்தியா பங்கேற்றது.

2. உறுப்பு நாடுகளுக்கு முழுமையான முன்னெச்சரிக்கை சேவைகள், திறன் மேம்பாடு மற்றும் அனர்த்த நெருக்கடி குறைப்பு தொடர்பாக ஆதரவளிக்கும் அரசுகளுக்கிடையேயான நிறுவனமே RIMES. காலநிலை மீள்தன்மை மற்றும் பேரிடர் தயார்நிலை குறித்த பிராந்திய ஒத்துழைப்பை ஊக்குவிப்பதில் அதன் முதநிலையை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் இந்தியா தற்போது RIMES அமைப்பின் தலைமைத்துவத்தை கொண்டுள்ளது.

3. RIMES அமைப்பின் பேரவைக் கூட்டம் 2025 மே 7, அன்று இந்திய அரசின் புவியியல் விஞ்ஞான அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் எம். ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரவையின் நிறுவக முன்னுரிமைகள் குறித்து இங்கு விவாதிக்கப்பட்டதுடன், மாநாட்டின் பரிசீலனைக்காக அமைச்சர்கள் பிரகடனத்தின் வரைவு குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

4. இதன் தொடர்ச்சியாக அடுத்த நாள் அமைச்சர்கள் மட்ட மாநாடு நடைபெற்றது, அங்கு இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இந்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்தார். அவர் தனது உரையில், "அனைவருக்கும் முன்னெச்சரிக்கை" திட்டம் மற்றும் RIMES செயற்பாடுகளின் விஸ்தரிப்பு உள்ளிட்ட RIMES முன்முயற்சிகளுக்கு இந்தியாவின் உறுதியான ஆதரவை வலியுறுத்தினார். அத்துடன், முன்மொழியப்பட்ட RIMES பிராந்திய மையத்தை நடத்துவதற்கான இந்தியாவின் நோக்கத்தையும் அவர் விவரித்தார்.

5. பிராந்தியத்தில் தோன்றும் பல்வேறு ஆபத்துகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகள், காலநிலை சேவைகள் மற்றும் அனர்த்த எதிர்ப்புத் திறனை மேம்படுத்துவதற்கான அவர்களின் கூட்டு

உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இம்மாநாட்டின்போது RIMES அமைச்சர்கள் பிரகடனம் உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*******

**கொழும்பு**
**10 மே 2025**